பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ சிறப்பிது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The "Nam Nadu" – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,

மலர்: 20] சென்னை: ஆனி 25 (8—7—72) சனி வெளியூர்: ஆனி 26 (9—7—72) ஞாயிறு [இதழ்: 21

கல்லூரி நூலகர்கட்கு ஊதிய உயர்வு

விரைவில் அரசு ஆணை பிறப்பிக்கும்

சென்னை, ஜூலை 6—

"கல்லூரிகளில் பணியாற்றும் சில பிரிவு நூலகர்களின் (லைப்ரேரியன்களின்) ஊதிய விகிதங்கள் விரைவில் திருத்தியமைக்கப்படும்.

இதுபற்றி அரசு தற்போது

(2-ம் பக்கம் பார்க்க)

'செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குச் செல்லக் குறுக்கு வழி இல்லை'

தமிழக மக்கள் இதனைத் தெளிவுபடுத்திவிட்டனர்

துக்ககரமான நிகழ்ச்சிகளுக்கு எதிர்க் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்

'வன்முறைப் போராட்டத்துக்கே துவக்கம் முதல் வழிவகுக்கப்பட்டது'--'டைம்ஸ் ஆப் இந்தியா' கண்டனம்

சென்னை, ஜூலை 8--

ஜூலை 5-ஆம் நாள் தமிழகத்தில் நடந்த நிகழ்ச்சிகள், தி. மு. க. அரசைக் கவிழ்த்துவிட்டுக் குறுக்கு வழியில் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குச் செல்ல எதிர்க் கட்சியினர் செய்த சதியின் விளைவே என்பதையும், தமிழக மக்கள் சரியானபடி தகர்த்தெறிந்துவிட்டதையும், பம்பாயிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில நாளிதழ் சுட்டிக்காட்டிக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

"திட்டமிட்ட வன்முறைச் செயல்களின் விளைவாக ஏற்பட்ட துக்ககரமான நிகழ்ச்சிகட்குக் கிளர்ச்சியில் தொடர்பு கொண்ட கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்" என்றும் அது தனது தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அதேபோன்று, டில்லியிலிருந்து வெளிவரும் 'இந்துஸ்தான் டைம்ஸ்', 'எக்னமிக் டைம்ஸ்' ஆகிய ஆங்கில நாளிதழ்களும், தமிழ்நாட்டு எதிர்க் கட்சிகளின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தி --- ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியினைக் கண்டித்து எழுதியுள்ளன.

இந்திரா காங்கிரசின் இரட்டை வேடத்தையும், வலது கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதத்தையும் அந்த ஏடுகள் வெளிப்படுத்தி, உண்மை நிலையை எடுத்து விளக்கியுள்ளன; கிளர்ச்சியாளர்கள் துவக்கமுதலே வன்முறையில் திட்டங்களை வகுத்துச் செயல்பட்டதையும் அந்த ஏடுகள் சுட்டிக்காட்டியுள்ளன; மேற்சொன்ன மூன்று ஏடுகளும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் வருமாறு:---

'தமிழ்நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகள்--குறிப்பாக இந்திரா காங்கிரசு--வலது கம்யூனிஸ்டு--பழைய காங்கிரசு ஆகியவை, சென்ற புதனகிழமையன்று நடைபெற்ற ஒரு நாள் கடையடைப்பின்போது ஏற்பட்ட துக்ககரமான சம்பவங்களுக்கான எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும்.

"இதிலே மிகத் துக்ககரமான பிரச்சினை என்னவென்றால், சில சுயநலச் சக்திகள் கிராமப்புறங்களில் தங்கள் செல்வாக்கை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்துடன் தொடங்கியிருக்கின்ற இந்தக் கிளர்ச்சிக்கு இந்திரா காங்கிரசுக் கட்சியும் துணை போவதுதான்! தனது உண்மையான குறைபாடுகளிலிருந்து பொதுமக்களுடைய கவனத்தைத் தி.மு. கழகம் வேறு பக்கம் திருப்புவதற்குத்தான் இந்தத் தவறான போர்த் தந்திரங்கள் பயன்படும்!

"செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குச் செல்வதற்கு எந்த விதக் குறுக்கு வழியும் கிடையாது என்பதைத் தமிழ்நாட்டிலுள்ள எல்லா எதிர்க் கட்சிகளும் உணர வேண்டும்"

என்று டெல்லியிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில ஏடு சுட்டிக்காட்டியிருக்கிறது; இத்தொடர்பில் அது எழுதியிருப்பதாவது:—

"'விவசாயிகள் பம்பு செட்டுகளின் மின் கட்டண உயர்வுக்கு எதிராக அமைதியான--முறையான போராட்டத்தைத் தொடங்கி நடத்தியபோதிலும் தி.மு.க., அரசாங்கம் மிருகத்தனமான சகதியுடன் அதை ஒடுக்க முனைந்தது' என்று இ. காங்கிரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா கூறியிருக்கின்ற கருத்துக்குச் சிறிதுகூட ஆதாரம் கிடையாது.

அதற்கு மாறாக, 'தொடக்கத்திலிருந்தே இந்தப் போராட்டம் வன்முறை சார்புடையதாகவே இருந்தது; உதாரணமாக, சில நாட்களுக்கு முன்புதான் டிரான்ஸ்பார்மர்களையும் --டாலங்களையும் தகர்ப்பதாகச் சொல்லப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

விவசாயிகளின் செயற் குழுவும் -- அதை ஆதரிக்கின்ற அரசியல் கட்சிகளும், தங்களுடைய இறுதி நோக்கம் மாநிலத்தின் சமூக வாழ்க்கையை நிலைகுலைய வைப்பதுதான் -- என்று தெளிவாகக் கூறியிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில்தான், அதிகாரத்தில் உள்ள வெறும் பொறுப்புள்ளவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்க முடியுமோ அத்தகைய காரியங்களை மாநில அரசு மேற்கொண்டு -- தடுப்பு நடவடிக்கைகளாக ஏராளமான அரசியல் தொண்டர்களைக் கைது செய்தது; குழப்பம் வரக்கூடுமென்று எதிர்பார்க்கும் இடங்களுக்குப் போலீசுப் படைகளை அனுப்பிவைத்தது; சில இடங்களில் அளவுக்கு மீறிய சக்தி பயன்படுத்தப்படுவதும் சாதாரணமானதேயாகும்.

ஆனால், தமிழக முதலமைச்சர் கருணாநிதியைச் சங்கடத்தில் ஆழ்த்தக்கூடிய ஒரு பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்துவதுதான தங்களுடைய உண்மையான உள்நோக்கமா அல்லவா என்பதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

மின் கட்டண பிரச்சினை பற்றிய இந்தக் கிளர்ச்சி அரசியல் நோக்கத்தோடு தொடங்கப்பட்டு நடத்தப்படுவது என்று

(4-ம் பக்கம் பார்க்க)

பிரதாபச் சந்திரன் கொலை வழக்கு

தேடப்பட்டவர் சரண்

சென்னை, ஜூலை 8—

பிரதாபச் சந்திரன் கொலை வழக்குத் தொடர்பாகப் போலீசாரால் தேடப்பட்டுவந்த அமுல்தாஸ் என்பவர் நேற்று தலைமை மாகாண மாஜிஸ்திரேட் என். நடராஜன் முன்பு சரணடைந்தார்.

அவருடன் சேர்த்து இதுவரையில் 5 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

காவலில் வைக்க உத்தரவு

கண்ணன் கொலை வழக்குத் தொடர்பாக சீனிவாசன், நீலகண்டன், சண்முகம், ஜெபச்சந்திரன், இராசேந்திரன் ஆகிய 5 பேர் தலைமை மாகாண மாஜிஸ்திரேட் முன் கொண்டுவரப்பட்டனர்; அவர்களை ஜூலை 20-ம் நாள் வரை காவலில் வைக்கும்படித் தலைமை மாகாண மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

தலைமறைவான குசேலர் சரணடைந்தார்

பிரதாபச் சந்திரன் கொலை வழக்கில் தேடப்பட்ட முக்கிய புள்ளி

பெங்களூர், ஜூலை 7—

சிம்சன் ஊழியரும் -- கழகத் தொழிற் சங்கத் தலைவருமான பிரதாபச் சந்திரன் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகப் போலீசாரால் தேடப்பட்டுவந்த குசேலர் சரணடைந்தார்.

இதுவரை தலைமறைவாக இருந்துவந்த குசேலர், பெங்களூர் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் சரணடைந்திருக்கிறார்.

அவரை 10 நாட்கள் காவலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிறார்; அவரைச் சென்னைக்குக் கொண்டுசெல்லும் ஏற்பாடு நடைபெறுவதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு முதலமைச்சருடன் தலைமையமைச்சர் -- தொலைபேசியில் பேசினார்

சென்னை, ஜூலை 8—

நேற்றிரவு 9.30 மணியளவில் டெல்லியிலிருந்து தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, தொலைபேசி மூலம் தமிழக முதலமைச்சருடன் தொடர்பு கொண்டு பேசி, தமிழகத்து நிலவரங்களைக் கேட்டறிந்தார்.

இப்போது தமிழ்நாட்டில் அமைதி நிலவுவதையும் -- ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றிய விவரங்களையும் முதலமைச்சர் தெரிவித்தார்.

மற்ற எல்லா விவரங்களும் அடங்கிய கடிதம் ஒன்று அனுப்பிவைத்திருப்பதாகவும் முதலமைச்சர், தலைமையமைச்சரிடம் தெரிவித்தார்.

குடி நீர் இல்லாத கிராமங்கள்

காந்திநகர், ஜூலை 8—

குடிதண்ணீருக்கான வசதி இல்லாத 1,106 கிராமங்கள் குசராத்தில் இருக்கின்றன.

குசராத் சட்டமன்றத்தில் சுகாதார அமைச்சர் வாசுதேவ திரிபாதி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

முதலியார் குழு சிபாரிசுகளின் அடிப்படையில், இந்தக் கிராமங்களில் ஆய்வு நடப்பதாகவும் அவர் சொன்னார்.

மிட்டா மிராசுகளுடன் வன்முறையாளர்

பணப்பயிர் மீதான வரியை எதிர்ப்பதன் உள்நோக்கம் அம்பலம்

துணைபோகும் கட்சிகளின் பிற்போக்குத்தனம்— முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, ஜூலை 8—

" ஆளும் காங்கிரசின் முரண்பாடான நிலையை மக்கள் புரிந்துகொள்வார்கள்; கிட்டத்தட்ட அரச மானியம் ரத்து செய்தபோது பிற்போக்குவாதிகள் கிளர்ந்தெழுந்ததைப் போலத்தான் பணப் பயிருக்கு வருமான வரி போடும்போதும் இங்குள்ள மிராசுதார்கள் ஆளும் காங்கிரசுத் தலைமையிலும் — வலது கம்யூனிஸ்டுத் தலைமையிலும் கிளர்ந்தெழுகிறார்கள்.

" இங்குள்ள இந்திரா காங்கிரசுடன், பழைய காங்கிரசும் — சுதந்தராவும் இந்தக் கிளர்ச்சியில் சேர்ந்திருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை; இது அவர்கள் பிரச்சினை.

" பயிர் அடிப்படையில் வருமான வரி விதிப்பதில் 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் வருமான வரி இல்லை என்று அரசு அறிவித்திருக்கிறது; 'வருமான வரிக் கணக்கு வைக்கத் தேவையில்லை' என்பதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்போவதாகவும் கூறியிருப்பது சாதாரண விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகையாகும்.

" மிட்டா மிராசுதாரர்கள், தாங்கள் பாதிக்கப்படுவதால் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள்; அதற்கு, 'விவசாயிகள் கிளர்ச்சி' என்று பெயரும் சூட்டி சிறிய விவசாயிகளைக் கவர்ந்திடப் பார்க்கிறார்கள்; வன்முறையாளர்களைத் தவிர வேறு யாரும் அந்தப் பக்கம் இல்லை.

" சுமார் 93 இலட்சம் நிலப் பட்டாதாரர்களில் 3 அல்லது 4 இலட்சம் பட்டாதாரர்கள்தான் பம்பு செட் வைத்திருக்கிறார்கள்; மின்சாரக் கட்டணம் ஒரு காசு ஏற்றியதற்காக அவர்கள் போராடுவதும் அதற்கு இந்திரா காங்கிரசும் — வலது கம்யூனிஸ்டும் துணை போவதும் தி. மு. கழக அரசு மீதுள்ள வெறுப்பே தவிர வேறல்ல."

—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் சுட்டிக் காட்டி விளக்கினார்; இத்தொடர்பில், செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் — முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:— " இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஏதாவது புது வழி காணப்படுமா?"

பதில்:— " முதலில் போராட்டத்தின் நோக்கம் என்ன என்பது தெரியவேண்டும்; அதுபற்றி வேறு எந்த மாநிலத்திலும் காட்டாத அக்கறையை இந்திரா காங்கிரசின் தலைமைப்பீடம் தமிழ்நாட்டில் மாத்திரம் காட்டுவது எந்த உள்நோக்கத்தில் என்பது தெரியவில்லை.

சோஷலிசத்துக்கு விரோதமான கோரிக்கை

" கிளர்ச்சிக்காரர்களுடைய கோரிக்கைகளில் மத்திய அரசு விதித்துள்ள பம்பு செட் வரி உயர்வு — உரத் தீர்வை உயர்வு ஆகியவையும் இடம் பெற்றிருக்கின்றன; பயிர் இன்சூரன்சுத் திட்டமும் கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கைகளில் ஒன்று.

" பணப் பயிர்களுக்குப் பயிர் அடிப்படையில் விவசாய வருமான வரி போடக்கூடாது என்ற — சோஷலிசத்துக்கு விரோதமான கோரிக்கை ஒன்றையும் கிளர்ச்சிக்காரர்கள் சேர்த்திருக்கிறார்கள்.

இ. காங்கிரசாரின் முரண்பாட்டை ஆராய்வதற்கே!

" இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைவிட இங்கு மின் கட்டணம் குறைவு; இந்தக் கோரிக்கைகளைப் பற்றி ஆளும் காங்கிரசுத் தலைமைப்பீடம் என்ன விளக்கம் அளிக்கிறது என்பதை அறிய ஆவல் உள்ளவனாக இருக்கிறேன்.

" ஒருவேளை, அவர்களால் அனுப்பப்போவதாகச் சொல்லப்படும் தூதுக் குழு இங்கு உள்ள இந்திரா காங்கிரசார், மத்தியில் உள்ள இ. காங்கிரசுக்கு முரண்பாடாக எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதை ஆராய்வதற்காக இருக்கும் என்று கருதுகிறேன்.

தலைமை அமைச்சருக்கு விளக்கக் கடிதம்

" இதுபோன்ற — மத்திய அரசின் கொள்கைகளுக்கு விரோதமான கோரிக்கைகளை எழுப்பியிருக்கின்ற நிலைமை பற்றியும், அந்தக் கோரிக்கைகளின் விவரங்கள் பற்றியும் நான் தலைமையமைச்சருக்கு விளக்கமாகக் கடிதம் எழுதியிருக்கிறேன்; அவர்களுடைய கோரிக்கைகளில் மாநில அரசால் நிறைவேற்றப்படக்கூடியவை எவை எவை என்பதையும், அவைகளைப் பரிசீலித்து சென்ற வாரமே மாநில அரசின் சார்பில் பல சலுகைகளை அளித்திருப்பதையும் தலைமையமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது."

வேண்டுமென்றே திரித்துக் கூறுகின்றனர்

கேள்வி:— " பேச்சு வார்த்தை மறுபடியும் நடப்பதற்கு ஏதாவது நேரம் குறிக்கப்படுமா? நேரம் குறிக்கப்படவில்லை என்று அவர்கள் சொல்கிறார்களே?"

பதில்:— " பொய்யே பேசுவது என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்கள்; 'எனது நண்பரான நாடாளுமன்ற உறுப்பினர் இது சம்பந்தமாக வந்து பார்த்தார்' என்று முன்பு நான் கூறியது பூவராகனைத்தான்; இரவு 8.30 மணிக்கு கோட்டையில் சந்திப்பது என்று விவசாயப் பிரதிநிதிகள் சார்பில் சந்தித்த பூவராகன் எம். பி.-யிடம் ஒப்புதல் கொடுத்தேன்; அதற்காகவே அம்பத்தூர் தொழிற்பேட்டையில் எனக்கு இருந்த நிகழ்ச்சியை விரைவுபடுத்தி முடித்துவிட்டு — 8 மணிக்கெல்லாம் சென்னைக்குத் திரும்பிவிட்டேன்; விவசாயப் பிரதிநிதிகளை கோட்டையில் சந்திப்பதற்கான ஏற்பாடும் கோட்டையில் செய்யப்பட்டன; இரவு 8.45 மணிக்கு பூவராகன் வந்து, என்னிடமும் — என்னோடு இருந்த மற்ற அமைச்சர்களிடமும், 'விவசாயப் பிரதிநிதிகள் உங்களைச் சந்திக்க வரவில்லை' என்று சொன்னார்."

கேள்வி:— " சந்திக்க வராததற்கான காரணம் எதுவும் அவர் சொன்னாரா?"

பதில்:— " அந்தக் காரணத்தை பூவராகன் சொல்லட்டும்; அதற்குமேல் உள்ளதை நான் சொல்கிறேன்."

கேள்வி:— " முதலமைச்சர் அழைத்தால்தான் பேச வருவோம்; அவர் எங்களை அழைக்கவில்லை என்று சொல்கிறார்களே?"

பதில்:— " அப்படியென்றால், பேச்சுவார்த்தைக்கான நேரம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கவேண்டிய அவசியம் இல்லையே? அவர்களை எந்தச் சமயத்திலும் சந்திக்க மறுத்தேன் என்று சொல்லுவது, வேண்டுமென்றே திரித்துக் கூறும் செய்தியாகும்; ஏற்கனவே அவர்கள் என்னை இரண்டொரு முறை சந்தித்து, பிரச்சினைகள் பற்றிப் பேசியிருக்கிறார்கள்; மன்றாடியார் குழுவினர் ஏப்ரல் மாதத்தில் என்னை சென்னையில் சந்தித்தார்கள்; பிறகு கிருஷ்ணசாமி கவுண்டர் குழுவினர் என்னைக் கோவையில் சந்தித்தார்கள்.

" ஏற்கனவே, 'மன்றாடியார் — நாராயணசாமி நாயுடு போன்றவர்கள் நடத்தும் கிளர்ச்சி தேவையற்றது — சரியானது அல்ல' என்று கிருஷ்ணசாமி கவுண்டரே ஏப்ரல் மாதத்திலேயே ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்; அந்த அறிக்கையின் அடிப்படையில், மன்றாடியார் போன்றவர்களை சந்திக்க வேண்டாம் என்று அவரே என்னிடம் நேரில் கூறினார்."

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டு அலுவலக முகவரி

ஆகஸ்டு 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு அலுவலகம் கீழ்க்காணும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ளது:—

மதுரை மாவட்ட தி. மு. க.
மாநாட்டு அலுவலகம்
1-ம் பகுதி மங்கம்மாள் சத்திரம்,
மதுரை-1.

தொலைபேசி எண்:
31301

கல்லூரி நூலகர்கட்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது; விரைவில் இது சம்பந்தமான ஆணை பிறப்பிக்கப்படும்"

என்று தமிழ அரசு கல்வித் துறைச் செயலாளர் கே. திரவியம், கல்லூரி நூலகர்கள் சங்க நிர்வாகிகளிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

" தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கல்லூரிகளிலும் வேலை பார்க்கும் நூலகர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்தும் யோசனையும் இருந்து வருகிறது."

சிம்லா ஒப்பந்தம்

பாகிஸ்தான் அமைச்சரவை வரவேற்பு

இராவல்பிண்டி, ஜூலை 8—

இந்தியா — பாகிஸ்தான் ஒப்பந்தம் பற்றிப் பாகிஸ்தான் அமைச்சரவை ஆலோசனை நடத்தியது.

சிம்லாவில், இந்தியாவுக்கும் — பாகிஸ்தானும் இடையே ஏற்பட்ட ஒப்பந்த நகலைப் பாகிஸ்தான் அமைச்சரவையில் பூட்டோ தாக்கல் செய்தார்.

ஒப்பந்தம் பற்றி இரண்டரை மணி நேரம் பாகிஸ்தான் அமைச்சர்கள் விவாதித்தனர்.

'இது ஒரு நல்ல தொடக்கம்' என்று அமைச்சர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

காஷ்மீரில் பாகிஸ்தான் வசம் உள்ள எல்லையோரப் பகுதிகளில் ஏற்கனவே மண் சுவர் கட்டப்பட்டு வந்தது; ஒப்பந்தம் காரணமாக இந்தச் சுவர் கட்டும் வேலையைப் பாகிஸ்தான் நிறுத்தி விட்டது.

பாகிஸ்தான் எதிர்க் கட்சித் தலைவர் கான் அப்துல் வாலிகான் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளார்.

இந்திரா காந்தியைத் துதி பாடும் புத்தகம்

பள்ளிகளில் பாடமாக வைத்திருப்பதற்கு எதிர்ப்பு

கேரள மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகமுன் கொளுத்தத் திட்டம்

கொச்சி, ஜூலை 7—

'இந்திரா பிரியதரிசினி' என்ற ஆறாவது வகுப்புப் பாடப் புத்தகத்தைக் கேரளத்தில் எல்லா மாவட்டக் கல்வி அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு எதிரேயும் இந்திய சோஷலிஸ்டுக் கட்சியை ஆதரிக்கும் இந்திய மாணவர் நிறுவனத்தின் தொண்டர்கள் ஜூலை 24-ம் தேதி கொளுத்துவார்கள் — என்று இந்திய மாணவர் நிறுவனத்தின் தலைவர் தாமஸ் பாபு தெரிவித்தார்.

"தலைமையமைச்சர் இந்திரா காந்தியைத் துதி பாடுவதே இந்த புத்தகத்தின் முக்கிய நோக்கம்' என்றும் அவர் சொன்னார்.

"இந்திரா காந்திதான் இந்தியாவின் ஆத்மா" என அப்புத்தகம் வர்ணிக்கிறது என்றும், மாணவர்களை இம்மாதிரிப் புத்தகங்களைப் படிக்கச் செய்வது பாசிச வழியே யாகும் என்றும் அவர் சொன்னார்.

அயன்புரத்தில் பேருந்து நிலையம்

பேராசிரியர் அன்பழகன் திறந்துவைத்தார்

சென்னை, ஜூலை 8—

சென்னை அயன்புரத்தில், நல்லவா போக்குவரத்துக் கழகம் அமைந்துள்ள புதிய பஸ் நிலையத்தைத் தமிழ்நாடு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்துவைத்தார்.

விழாவிற்கு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் தலைமை தாங்கினார்.

இங்கு ஒரே சமயத்தில் 12 பஸ்கள் நிற்க முடியும்.

இங்கு ஒரு சிற்றுண்டி நிலையமும் பஸ் ஊழியர் ஓய்வுபெறும் அறையும் அமைக்கப்பட்டுள்ளன.

ஓய்வு நேரத்தில், பஸ் ஊழியர் பொழுதுபோக்கு வசதிகளும் செய்யப்பட்டன.

வனஸ்பதிக்கு விலை நிர்ணயம்

'இயலாது என்கிறார்' மத்திய அமைச்சர்

புதுடில்லி, ஜூலை 8—

" நாடு முழுவதிலும் வனஸ்பதிக்கு ஒரே விலை வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது"

என்று உணவு—விவசாயத் துறை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது நாடாளுமன்ற உணவு—விவசாய அமைச்சக ஆலோசனைக் குழுவில் தெரிவித்தார்.

வனஸ்பதி உற்பத்திச் செலவில் 80 சதவிகிதம் மூலப் பொருள்களின் விலையாகும் என்றும், இந்த விலைகள் பருவத்துக்குப் பருவம் மட்டுமன்றி வட்டாரத்துக்கு வட்டாரம் மாறுபட்டு வருகின்றன என்றும், இத்தகைய வழக்கமான விலைவாசி ஏறுமாறுகள் நிலவரத்தில் நாடு முழுவதும் ஒரே சீரான விலை என்பது பொருந்தாது என்றும் அவர் கூறினார்.

புதுடில்லி, ஜூலை 7—

இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் கென்னத் கீட்டிங், பதவியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

" அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் நிக்சனை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம் செய்ய அமெரிக்காவுக்குப் போகிறேன்; அதனால்தான், இந்தியத் தூதர் பதவியை விட்டு விலகுகிறேன்" என்று அவர் கூறினார்.

கோபியில் அர்த்தால் படுதோல்வி

கோபி, ஜூலை 8—

5—7—72-ல் விவசாயிகள் சங்கத்திற்கு ஆதரவாக நடைபெற்ற அர்த்தால் ('பந்த்') கோபி நகரில் படுதோல்வியடைந்தது.

சுமார் 1,500 கடைகள்—பெரும் வியாபார நிலையங்கள் — ஐந்து சினிமா தியேட்டர்கள்—ஒரு பாத்திரத் தொழிற்சாலை — தினசரி மார்க்கெட் — அரசு அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்ட கோபி நகரில் எண்ணி ஆறு கடைகளைத் தவிர மற்ற எல்லாக் கடைகளும் திறந்துவைக்கப்பட்டு—வழக்கம்போல் வியாபாரம் நடைபெற்றதுடன், சினிமாக் காட்சிகளும் நடைபெற்றன.

நகரிலுள்ள டாக்சிகள்—வாடகை வண்டிகள் அனைத்தும் வழக்கம்போல ஓடின; ஒரு சதவிகிதம் கூட அர்த்தால் நடைபெறவில்லை.

முழுமையாக கோபி நகரில் கடைகள் திறக்கப்பட்டு (பந்த்) முறியடிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஆங்கில நாளேடுகளான 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமணி' ஆகிய பத்திரிகைகளில் கோபியில் (பந்த்) நடைபெற்றது என்று வந்துள்ள செய்தி வியப்புக்குரியதாகும்.

கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்

'அர்த்தால் — கோபியில் ஏன் நடைபெறக் கூடாது' என்ற நிலைமை விளக்கப் பொதுக்கூட்டம் 4—7—72-ல் நடைபெற்றது.

கூட்டத்தில் ஜி என். இராசு எம்.எல்.சி., டாக்டர் எஸ். எம். பழனியப்பன் எம்.பி.பி.எஸ், எம். எல்.ஏ., வழக்கறிஞர் கே. எஸ். ஆனந்தன், கே. என். கே. இராமசாமி எம்.ஏ, ஜி கே. சின்னுசாமி, ஜி. பி. வெங்கிடு எம்.சி., டி. பி. செங்கோட்டையன், தமிழரசு, ஜி. எஸ். அருணாசலம், மாணவர் இராமச்சந்திரன், மணி ஆகியோர் பேசினர்.

கூட்டத்திற்கு ஜி. எஸ். இராமசாமி தலைமைவகித்தார்.

அர்த்தால் நடைபெறாமல் இருக்கவும் — கோபி நகரில் அமைதி காக்கவும் உதவிய கழகத் தொண்டர்களுக்கும்—வழக்கம்போல கடை திறந்து அர்த்தாலை முறியடித்த வியாபாரப் பெருங்குடி மக்களுக்கும்—காவல் துறையினருக்கும்—நல்லமுறையில் ஒத்துழைத்த பொதுமக்களுக்கும் தி. மு. க. சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கழகத் தோழர்களின் கடைகள் கொள்ளை

கூட்டுறவுச் சங்கத்திலும் புகுந்து சூறையாடினர்

சத்திரப்பட்டியில் அராஜகவாதிகளின் திருவிளையாடல்

சத்திரப்பட்டி, ஜூலை 6—

இராமநாதபுரம் சத்திரப்பட்டியில், விவசாயிகள் கிளர்ச்சி என்ற பெயரால் காலிகள் நடத்திய திருவிளையாடல்கள் குறித்து, சத்திரப்பட்டி தி. மு. க. செயலாளர் டி. கே. சாமி தெரிவித்துள்ள விவரம் வருமாறு:—

இங்கு வலதுசாரிக் கம்யூனிஸ்டு —சிண்டிகேட் காங்கிரசு —இந்திரா காங்கிரசு ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள், '5—7—72-ல் நடைபெறவிருக்கும் அர்த்தாலில், தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் கடைகள் — வீடுகள் கொள்ளையடிக்கப்படும்' என்று டாம் டாம் போட்டும், குழல் மூலமும் — போர்டுகள் மூலமும் பகிரங்கமாக 3—7—72-லிருந்து அறிவிப்புச் செய்தனர்.

திட்டமிட்டபடி 5—7—72 காலையிலேயே பக்கத்துக் கிராமங்களில் உள்ள சுமார் 30-க்கும் அதிகமான வண்டிகளை சாலைகளில் நிறுத்தி வைத்துவிட்டு — அவ் வண்டிகளின் முளைக் கம்புகளை கையில் எடுத்துக்கொண்டும், வேல் கம்பு — அரிவாள் — குத்தீட்டி — கம்பி — கம்பு ஆகியவைகளைக் கையில் ஏந்திக் கொண்டும் சுமார் 10-30 மணியளவில் ஊருக்குள் நுழைந்தனர்.

சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்த வணிகர்களுக்கு வண்டி ஓட்டும் வண்டிக்காரர்கள் — அவர்களின் நிலங்களில் பணியாற்றும் வேலையாட்கள் ஆகியோருக்குப் பணம் கொடுத்துக் கழகத் தோழர்களின் கடைகளில் கொள்ளையடிக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

ஊர்வலத்தில் வந்தவர்கள் முதலமைச்சரைப் பற்றியும் — தி. மு. கழகத்தைப் பற்றியும் இழிவான முறையில் சத்தமிட்டுக்கொண்டு வந்தனர்.

வரும் வழியில் இருந்த தி. மு. கழகக் கொடிக் கம்பத்தை ஒடித்துவிட்டு, தி. மு. கழகத் தோழர் எஸ் வேலுச்சாமியின் அண்ணா தேனீர் விடுதி — அ பொன்னுசாமியின் வெற்றிலைப்பாக்கு டீக்கடை — வனமூர்த்தியின் டீக்கடை — கருப்பையா பிள்ளையின் காபி ஓட்டல் ஆகிய நான்கு கடைகளையும் கொள்ளையடித்து சுமார் ரூ. 3,000 பெறுமானமுள்ள பொருள்களை எடுத்துச் சென்றுவிட்டனர்.

பின்பு, எம். ஜி ஆர். பகுத்தறிவு மன்றம் — தி. மு. க. செயலாளர் டி. கே. கே. சாமி தலைமை ஏற்றுள்ள ஆர். 90 நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், அமரர் அண்ணா மன்றம் ஆகியவற்றிலுள்ள பெட்டிகளை உடைத்தனர்; கண்ணாடிப் படங்களைத் தூள் தூளாக்கினர்; பல பொருள்களை வீதியில் எறிந்தனர்; பணம் மற்றும் சில பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

பின்பு கழகத் தோழர்களின் வீடுகளில் கல்லெறிந்து, அவைத் தலைவர் அ. சங்கரனின் — தொழிலுக்குப் பயன்படுத்தக்கூடிய சுமார் 500 ரூ. மதிப்புள்ள 'A' அடையாளமிட்ட கம்பிகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

வழிநெடுகிலும் உள்ள தி. மு. கழகக் கொடி மரங்களை ஒடித்துச் சென்றனர்.

இந்தக் கொள்ளை நிகழ்ச்சி சுமார் ஒரு மணி நேரம் நடந்தது; காவல் துறையினரைப் பாதுகாப்புக்கு வரவிடாமல் தடுக்கச் சாலை நெடுகிலும் வண்டிகளை நிறுத்தி வழிமறித்தனர்.

இச்செயல்களின் மூலம் அவர்கள், திட்டமிட்ட சதியை எவ்வித எதிர்ப்புமின்றி செய்துமுடித்தனர்.

சுமார் ரூ. 3,000 மதிப்புள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன; சுமார் ரூ. 2,000 மதிப்புள்ள பொருள்கள் சேதம் படுத்தப்பட்டுள்ளன.

அவர்கள் கொள்ளையடித்த கடைகள் — மன்றங்கள் — கூட்டுறவுச் சங்கம் — வீடுகள் பூட்டியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

கிளர்ச்சிகளில் கலந்துகொண்டவருக்குச் சீட்டு!

உழைப்பாளர் கட்சியில் ஒழுங்கு நடவடிக்கை

திருச்சி, ஜூலை 8—

உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ் எஸ் இராமசாமி படையாச்சியின் அறிக்கையை மீறி விவசாயிகள் கிளர்ச்சியில் கலந்துகொண்டதற்காக உழைப்பாளர் கட்சிச் செயலாளரும் — ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத் தலைவருமான ஜி தியாகராசன கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'என் நடிப்புக்கு மட்டும் கிடைத்த சிறப்பு அல்ல—படத்தில் பங்குபெற்ற அனைவரையும் சாரும்'

'பாரத்' விருதுபெற்றது பற்றி எம். ஜி. ஆர். — பாராட்டுக் கூட்டத்தில் நன்றியுரை

சென்னை, ஜூலை 8—

" எனக்கு அளிக்கப்பட்ட 'பாரத்' என்ற விருதைப் பெறுவதற்காக நான் ஒருவன் மட்டும் காரணமன்று; எந்தப் படத்தில் என் நடிப்புக்காக அந்த விருது தரப்பட்டதோ அந்தப் படத்தில் பங்குபெற்ற தோழர்கள் அனைவருக்குமே கிடைத்த பெருமையாகும்"

என்று தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விருந்து நிகழ்ச்சியில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நன்றியுடன் கூறினார்.

அனைத்திந்தியாவின் சிறந்த நடிகராக விருதுபெற்று வந்த புரட்சி நடிகரைப் பாராட்டும் வகையில் நேற்று முன்தினம் சென்னை சத்யா ஸ்டுடியோவில் — ஊழியர்கள் சார்பிலும் — இரண்டு தயாரிப்பு நிறுவனங்கள் சார்பிலும் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சிக்குப்பின் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

கலையுலகப் பிரமுகர்கள் — தயாரிப்பாளர்கள் — தொழில் நுணுக்கக் கலைஞர்கள் பெரும் அளவில் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

" குடும்பத்திலே ஒருவருக்குக் கிடைக்கின்ற பெருமையை, அந்தக் குடும்பத்தினர் அனைவரும் உள்ளப் பூரிப்போடு பாராட்டும் உவகையுடன் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது"

என்று 'ரிக்‌ஷாக்காரன்' படத் தயாரிப்பாளர் ஆர். எம். வீரப்பன், தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

இந்தப் பாராட்டு விழாவுக்கு ஏ. எல் சீனிவாசன் தலைமை வகித்தார்.

ஸ்டுடியோ ஊழியர்கள் சார்பாக இரண்டடி உயரமுள்ள ஒரு வெள்ளிச் செங்கோல் — பேழை புரட்சி நடிகருக்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

திரைப் படத் துறையுடன் தொடர்பு கொண்ட ஊழியர்கள் பலரும் புரட்சி நடிகருக்கு மாலைகள் அணிவித்தனர்.

எம். ஜி. ஆர். பள்ளியைச் சேர்ந்த ஆசிரியைகள் சார்பாக வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது.

விழாவில் புரட்சி நடிகரின் தமையனார் எம். ஜி சக்கரபாணி அவர்களுக்கு ஆர். எம். வீரப்பன் மாலை அணிவித்தார்.

கவிஞர் அவிநாசி மணி பாராட்டுக் கவிதை வாசித்தளித்தார்.

தலைவரின் தலைமை உரைக்குப் பிறகு இயக்குநர் கிருஷ்ணன் — பஞ்சு, கல்வி இயக்குநர் சிட்டிபாபு, ப நீலகண்டன், வழக்கறிஞர் வி.பி. இராமன், என். எஸ். நாராயணன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, எம்.எல்.சி., இலட்சிய நடிகர் எஸ் எஸ். இராசேந்திரன் எம்.பி. ஆகியோர் பேசினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் புரட்சி நடிகர் உரையாற்றினார்.

விழாவின் இறுதியில் கதாசிரியர் சொர்ணம் நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
மணமக்களுக்கு ஒரு மகத்தான பரிசு.
தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்குவீர்.
ரூ. ஒரு லட்சம் பரிசு பெறக்கூடும்
மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 7,00,000*
முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)
குலுக்கல் நாள்:
31-7-1972
பரிசுச் சீட்டு ஒன்றின்
விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9
*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

காங்கிரசின் போலித்தனம்

நாணயமற்ற போராட்டத்தில் கலந்துகொள்ளும் விசித்திரம்

தீவிரவாதம் பேசுவோர் சனநாயக முறையையே சீர்குலையவைக்கும் முயற்சியில் ஈடுபடுவதேன்?

'இந்துஸ்தான் டைம்ஸ்' எழுப்பும் வினுக்கள்

"காங்கிரசுக் கட்சி அலை அலையாகத் தமிழ்நாட்டில் கடையடைப்புக்களையும் – வேலைநிறுத்தங்களையும் தொடர்ந்து நடத்த ஆசைப்படுகிறதா? இந்தச் சூழ்நிலையில் தன்னுடைய சொந்தக் கட்சியைக் கட்டுப்படுத்தி வைப்பதற்குப் பதிலாக இ. காங்கிரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா, போலீசு அட்டூழியங்கள் நடைபெற்றிருப்பதாக மாரடித்துக் கொள்வது நிச்சயமாக உகந்த செயல் ஆகாது.

"உண்மையில் எந்தப் பிரச்சினையை வைத்து இந்தக் கிளர்ச்சி நடத்தப்படுகிறது? தி. மு. கழக அரசு மிதமாக உயர்த்திய மின்சாரக் கட்டணத்தை மிகப் பெரிய விவசாயிகள் – குறிப்பாக கோவை மாவட்டத்தில் இருக்கின்றவர்கள் கட்ட விரும்பவில்லை.

"இதிலே விசித்திரம் என்னவென்ருல், சென்ற மார்ச் மாதம்தான் மத்திய அரசு ஆண்டுக்கு சுமார் ரூ. 11 கோடிக்கு மின்சாரக் கட்டணத்திற்கு 'சர்சார்ஜ்' உட்பட பல வரிகளைப் போடுமாறு தமிழக அரசுக்கு எழுதியிருக்கிறது! இது தவிர, கிராமப்புறங்களிலிருந்து வருவாயைப் பெருக்குமாறு மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

"அந்தக் காரியத்தைத் தி. மு. கழக அரசு செய்ய முன்வருகின்றபோது, நாணயமற்ற அரசியல் காரணங்களுக்காக முற்றிலும் தவருன இந்தப் போராட்டத்தில் காங்கிரசும் கலந்துகொள்கிறது; நாட்டைச் சீர்திருத்துவதாகவும் – தலைமைவகித்து நடத்திச் செல்வதாகவும் கூறிக்கொண்டு ஒரு பக்கம் தீவிர வாதம் பேசிக்கொண்டு, இன்னொரு பக்கம் சனநாயக முறையையே சிந்தனையற்ற முறையில் சீர்குலைய வைக்கும் முயற்சியில் ஈடுபடும் காங்கிரசின் போலித்தனத்துக்கு இது மேலும் ஓர் உதாரணமாகும்"

என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற ஏடு சுட்டிக்காட்டிக் கடுமையாகக் கண்டித்திருக்கிறது; இத்தொடர்பில் அது எழுதியிருப்பதாவது :—

"தமிழ்நாட்டில் நாடாளுமன்ற முறைகளுக்கு பாருகத தி. மு. கழக அரசைப் பதவியிலிருந்து இறக்கவோ, அல்லது மறைமுகமாக அந்த ஆட்சிக்குத் தொல்லை கொடுக்கவோ காங்கிரசுக் கட்சியும் சேர்ந்து நடத்திய விவசாயிகள் கிளர்ச்சி டில்லியில் ஜனசங்கம் நடத்திய கிளர்ச்சியைப்போலவே இருந்தது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

புதன்கிழமையன்று போலீசார் நடத்திய துப்பாக்கி சூட்டினுல் 14 பேர் இறந்தனர் என்கிற செய்தி எல்லோரும் துக்கப்படத்தக்க செய்தியாகும்; ஆனுல், அரசுடன் நேரடி மோதுதலைத் தவிர்க்க முடியாதபடி மாநிலமெங்கும் ஏன் கடையடைப்பு நடத்தப்பட்டது?

காங்கிரசு மற்றும் பிற கட்சிகளில் இருக்கின்ற தீவிரவாதிகள், கடையடைப்பு நடத்துமாறு வியாபாரிகளை வற்புறுத்தியதுதான் தமிழ்நாட்டில் கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற வன்முறைக்குக் காரணமாகும்.

"தமிழ்நாட்டில் இருக்கின்ற காங்கிரசுக் கட்சிக்கும் – மேற்கு வங்காளத்தில் இருக்கின்ற இடது கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?"

அந்தியூரில் அராஜகம்

கழகத் தோழரின் கடைமீது தாக்குதல்

அந்தியூர், ஜூலை 8—

அந்தியூரில், 5—7—72 அன்று சிண்டிகேட் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்களும், 'விவசாயிகள் சங்கம்' என்கின்ற பெயரால் அராஜகம் விளைவிக்கின்ற காலிகளும் சேர்ந்துகொண்டு திட்டமிட்டு, முருகன் என்ற கழகத் தோழரின் தேனீர் கடையைச் சூறையாடி – உடைமைகளைச் சேதப்படுத்தி – அவருடைய தாயாரையும் தாக்கினுர்கள்.

அதன்பின், அந்தியூர் தி. மு. க. அவைத் தலைவர் திரு. ஏ. என். சுப்பிரமணியத்தின் தேனீர் கடை மீது கற்களை வீசி, டியூப் லைட் – கண்ணுடி முதலியவற்றை உடைத்தனர்.

வன்முறையாளர்கள் வீசிய கற்களால் தோழர்கள் அய்யப்பன், கிருஷ்ணன் ஆகியோருக்குக் காயங்கள் ஏற்பட்டன.

மேலும் கிளர்ச்சியாளர்கள், அந்தியூர் செயலாளர் அ. வெற்றிவேல் – தலைவர் ஏ. என். சுப்பிரமணியன்—பேரறிஞர் அண்ணு மன்றத் தலைவர் க. ப. இராமசாமி ஆகிய மூவரையும் ஒழித்துவிடுவோம் என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். க. ப. இராமசாமியின் காருக்கு தீ வைப்பதாகக் கூறிச் சுற்றிக்கொண்டிருந்தனர்; அதன் பின், அந்தியூர் காவல் நிலையத்தில் பாதுகாப்பாக கார் நிறுத்தப்பட்டிருக்கிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

10–7–72

திட்டச்சேரி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பேருந்து நிலையம் அருகில்; தலைவர் : எஸ்.எம்.ஏ. அபூபக்கர்; பேசுவோர் : தம்பி தேவேந்திரன் எம்.எல்.ஏ., அ. சந்தானம், வே. சற்குணம், குணதாசன், மா. சிங்காரவேலு, கே. பி. எம். கபூர், சா. குருமூர்த்தி, உலகநாதன், கோ. இராசாங்கம், இரா. கணபதி, என். எம். பி. மதார்சா, ஏ. வி. நாதன், ஓ. ஏ. ஜே. ஆபிதீன்.



எதிர்க்கட்சிகளின் 'அரசியல்ஸ்டண்ட்'

கழக அரசைக் கவிழ்க்கக் கொடிய திட்டம்

பொருளாதாரப் பிரச்சினையை மையமாக வைத்துப் போராட அணிவகுத்து நிற்கும் வெட்கக்கேடு

'எக்ஞமிக் டைம்ஸ்' ஏட்டின் வேதனைமிக்க விளக்கம்

"விவசாயக் கிளர்ச்சியைப் பொறுத்தவரையில் தி மு. கழகம் பாவச் செயலில் ஈடுபடுகிறது என்று சொல்வதைக் காட்டிலும், 'அதற்கு எதிராக இழைக்கப்படும் பாவச் செயல்கள்தான் அதிகம்' என்று சொல்வதே பொருந்தும்.

"முழுக்க முழுக்க ஒரு பொருளாதாரப் பிரச்சினையைத் தி. மு. கழக அரசுக்கு எதிரான கட்சிகள் அவசியமற்ற முறையில் ஓர் அரசியல் 'ஸ்டண்டாக' மாறியிருக்கின்றன! இடது கம்யூனிஸ்டைத் தவிர மற்ற எல்லா எதிர்க்கட்சிகளும் இப்போது அணிவகுத்து நிற்கின்றன !

" தி. மு. க. அரசைக் கவிழ்க்கும் கொடிய திட்டத்தை உள்நோக்கமாகக் கொண்டுதான் இந்தப் போராட்டம் துவக்கப்பட்டிருக்கிறது"

என்று 'எக்ஞமிக் டைம்ஸ்' ஏடு வெளிப்படையாகச் சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறது; தனது தலையங்கத்தில் அது எழுதியிருப்பதாவது :—

"எதிர்பார்த்தபடி விவசாயிகள் செயற்குழு, தமிழ்நாட்டில் நடத்திய மாநிலம் தழுவிய கடையடைப்பு, துப்பாக்கிப் பிரயோகத்தில் முடிந்து பலர் இறந்திருக்கின்றனர்; ஆனுல் இந்தப் போராட்டத்திற்கான அடிப்படைக் காரணங்களை நாம் மறந்துவிடக்கூடாது.

தொடக்கத்தில், விவசாயிகளின் போராட்டக் குழு, மின் கட்டண உயர்வைப் பற்றிக் குறைகூறிக் கொண்டிருந்தது.

அடுக்கு முறையை (சிலாப் சிஸ்டம்) அறிமுகப்படுத்தி முதல்வர் விவசாயிகளுக்குச் சலுகை தர முன்வந்தார்; மேலும் ஒரு படி அதிகம்சென்று, எவ்வளவு நிலம் வைத்திருந்தாலும் மானவாரி நிலங்களுக்கு அடிப்படை நில வரியை ரத்து செய்தார்.

இவை எல்லாவற்றிலும் திருப்திபடாமல், விவசாயிகள் போராட்டக் குழு, தன்னுடைய பலகீனமான கோரிக்கைகளை முன்வைத்தது; கூட்டுறவுச் சங்கம்–நிலவள வங்கி போன்றவைகளுக்குத் தரவேண்டிய கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமென்றும் அரசினரிடம் அவர்கள் கோரினர்.

பம்பு செட்டுகளின் மீதும் – இராசாயன உரத்தின்மீதும் போடப்பட்டிருக்கின்ற வரிகளை ரத்து செய்யவேண்டுமென்றும் அவர்கள் கோரினுர்கள்.

ஆனுல், இந்தக் கோரிக்கைகள் எல்லாம் மத்திய அரசு சம்பந்தப்பட்டவை; எந்த மாநில அரசும் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது.

திட்டக் குழுவும் - மத்திய அரசும் கிராமப்புறத்திலிருந்து அதிகமான வருவாயைத் தேடும்படி சொல்லிக்கொண்டிருக்கின்றன; இந்த நேரத்தில், இந்த நிலச்சுவான்தார்களின் கோரிக்கைக்கு இந்திரா காங்கிரசு மேலே விழுந்து ஆதரவு தருவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

காங்கிரசுக் கட்சி இரட்டை வேடம் போடுகிறது – என்று தமிழ்நாடு முதலமைச்சர் கூறியிருப்பது ஆச்சரியத்திற்கு உரியதன்று; ஆனுல், இந்த வினையாட்டை இருதரப்பாரும் விளையாடலாம்.

பம்பு செட்டுகள் மீதும், இரசாயன உரத்தின்மீதும் மத்திய அரசு போட்டிருக்கின்ற வரியை எதிர்த்து தி. மு. க. ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக முன்பே ஒரு பேச்சு உலவுகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டு முதலமைச்சர் கூறுவது நியாயம் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

மத்திய அரசாங்கம் அதிக வருவாயைப் பெருக்க வேண்டுமென்று அனுப்பிய தாக்கீதின் மீது தமிழக அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் ஒன்றுதான் மின் கட்டணம் யூனிட்டிற்கு 10.8 காசிலிருந்து 12 காசுகளாக உயர்த்தப்பட்டதாகும்.

தமிழ்நாட்டிலுள்ள இந்த 12 காசு மின் கட்டணம்கூட நாடெங்கும் உள்ளதைவிட மிகக் குறைவானதாகும்; ஒரிசாவில் மிக அதிகமாக 25 காசு விதிக்கப்படுகிறது; உத்தரப் பிரதேசம்–மேற்கு வங்காளம்–மாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் முறையே 14–19–18 காசுகளாகக் கட்டணங்கள் இருக்கின்றன.

முதலமைச்சர் கருணுநிதி மிகச் சரியாகக் கூறியிருக்கின்றபடி, காங்கிரசு ஆளுகின்ற மாநிலங்களில் ஓர் அளவுகோலையும், காங்கிரசு எதிர்க் கட்சியாக இருக்கின்ற மாநிலத்தில் இன்னொரு அளவுகோலையும் பயன்படுத்த முடியாது.

தமிழ்நாடு அரசு சொல்கின்றபடி, புதிய வரிகளை விதித்து ரூ. 16 கோடிக்கு வருவாயைப் பெருக்கும்படி மத்திய அரசு கூறியிருக்கிறது.

ஆனுல், 'இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொழுது ஏழை விவசாயிகள் பாதிக்காதபடி முன்னெச்சரிக்கையாகச் செயலாற்றுவோம்' என்றும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது; மிக ஆழமான கிணறுகளில் தண்ணீர் எடுப்பவர்களுடைய சங்கடத்தைக் கவனிப்பதாக முதல்வர் கருணுநிதி முன்பே உறுதியளித்திருக்கிருர்."

சிம்சன் தொழிற்சாலை திறப்புஎப்போது?

தொழிலாளர்நல அமைச்சர் என். வி. என். அறிவிப்பு

சென்னை, ஜூலை 8—

"மூடப்பட்டுள்ள சிம்சன் தொழிற்சாலைகளை மீண்டும் திறக்கச் செய்து ஒரு சுமூகத் தீர்வு காண்பதற்காக அடுத்த வாரம் சிம்சன் தொழிற் சங்கப் பிரதிநிதிகள்—நிர்வாகிகள் ஆகியோரை அழைத்துப் பேச எண்ணியிருக்கிறேன்"

என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் நிருபர்களிடம் தெரிவித்தார்.

உண்ணுநோன்பை நிறுத்திக்கொண்டார்

"மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் சில கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறி உண்ணுநோன்பு இருந்துவந்த சட்டமன்ற உறுப்பினர் சுரேந்திரன், என்னுடைய உறுதிமொழியை ஏற்று, உண்ணுநோன்பை நிறுத்திக் கொண்டார்"

என்றும் அமைச்சர் தெரிவித்தார்; இது சம்பந்தமாகத் தொழிற் சங்கத் தலைவர் எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை தன்னைச் சந்தித்துப் பேசியதாகவும் அவர் சொன்னுர்.

துப்பாக்கிச் சூடு பற்றிய விசாரணை

விவசாயிகள் கிளர்ச்சிகளின் திருநெல்வேலி, இராமநாதபுரம், சேலம், கோவை மாவட்டங்களில் நடந்த துப்பாக்கிச் சூடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கான நீதிபதிகளின் பெயர்களை அரசு அறிவித்துள்ளது.

திருச்சி மாவட்டம் நீதிபதி டி. வி. ஆர். கோதண்டராமராசு திருநெல்வேலி விசாரணைக் கமிஷனுகவும், வேலூர் மாவட்ட நீதிபதி எஸ். ஏ. சுந்தரேசன் சேலம் விசாரணைக் கமிஷனுகவும், சென்னை தொழில் டிரிபியூனல் ஜி. கோபிநாத், இராமநாதபுரம் விசாரணைக் கமிஷனுகவும், மதுரை மாவட்டம் நீதிபதி ஏ. சிதம்பரம் கோவை விசாரணைக் கமிஷனுகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] சென்னை-[illegible]) [illegible]